டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.10.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 101 - Madurai | Online Edition

# வனப் பரப்பளவில் இந்தியா உலகளவில் 9-வது இடத்திற்கு முன்னேற்றம்

புது தில்லி, அக்.22

பாலித் தீவில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (எப்ஏஓ) வெளியிட்ட உலகளாவிய வன வள மதிப்பீடு 2025-ன் படி, உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியா ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல் சாதனையை எட்டியுள்ளது. உலகளவில் மொத்த வனப் பரப்பளவில் 9-வது இடத்திற்கு அது முன்னேறியுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், சமூக ஊடக எக்ஸ் பதிவில் இந்த வளர்ச்சியைப் பற்றி தெரிவித்துள்ளார்.

முந்தைய மதிப்பீட்டில், இந்தியா 10-வது இடத்தில் இருந்தது. வருடாந்திர வனப் பரப்பளவு ஆதாயத்தின் அடிப்படையில் இந்தியா உலகளவில் 3-வது இடத்தைப் பிடித்துள்ளது. இது நிலையான வன மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைக் கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், வனப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு மற்றும் சமூகம் தலைமையிலான சுற்றுச்சூழல் நடவடிக்கையை இலக்காகக் கொண்ட மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் வெற்றியை விளக்குகிறது என்று யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' என்னும் அழைப்பும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மீதான அவரது தொடர்ச்சியான முக்கியத்துவமும், நாடு முழுவதும் உள்ள மக்களை மரம் நடுதல் மற்றும் பாதுகாப்பில் தீவிரமாக பங்கேற்க தூண்டியுள்ளது.

வளர்ந்து வரும் பொதுமக்களின் பங்களிப்பு, பசுமையான மற்றும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய வலுவான கூட்டுப் பொறுப்புணர்வை வளர்த்து வருகிறது. காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் மாநில அரசுகளின் முயற்சி களுக்கான மோடி அரசின் திட்டமிடல் மற்றும் கொள்கைகளின் பின்னணியில் இந்தச் சாதனை சாத்தியமானது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

# பயிர் காப்பீடு செய்வீர்! பயன் பெறுவீர்!

இராணிப்பேட்டை, அக்.22

இராணிப்பேட்டை மாவட்டத்தில், நடப்பு 2025-26 ஆம் ஆண்டு ராபி சிறப்பு பருவத்தில் வருவாய் கிராம அளவில் சம்பா நெல் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம்.

கனமழை எச்சரிக்கை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ள நிலையில் ஏற்படவிருக்கும் பொருளாதார பாதிப்புகளில் இருந்து நெல்பயிர்களை பாதுகாக்க ராபி சிறப்பு பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டு வருகிறது. எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களில் இருந்து பாதுகாக்க விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய கேட்டு கொள்கிறோம்.

சம்பா நெல் பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15-ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் (குத்தகைதாரர் உட்பட) பயிர் கடன் பெறும் விவசாயிகளும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, அ) சிட்டா, ஆ) நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், இ) ஆதார் அட்டை, ஈ) வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள்,தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம். மேலும் தகவலுக்கு, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை / HDFC ERGO மாவட்ட ஒருங்கிணைப்பாளரை அணுகவும்.

இத்திட்டத்தில், நெல் II பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரீமியமாக ரூ. 545 /- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தித்திப்பூட்டும் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர்ப் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சியியல் துறையில் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் வாலிபர்களை வெற்றியாளர்களாக்கும் நோக்கத்தில் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி தொடர்ந்து 26 நாட்கள் 27.10.25 முதல் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் 25 நபர்களுக்கு வணிக ரீதியில் தேனீ வளர்ப்புக் குறித்த அனைத்து தொழில் நுட்பங் களும் விளக்கமாக கற்றுத்தரப்படும். இதில் பங்கு பெற 18-35 வயதுக்குட்பட்டவர்களாய் இருத்தல் அவசியம். மேலும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவோர் 26 நாட்களும் தொடர்ந்து கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற விரும்புவோர் ஆதார் நகல் எடுத்து வர வேண்டும்.




பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தொடர்பு கொண்டு 24.10.25 தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

தொடர்புக்கு : 93635 29576, 94868 93905, 91766 90292, 98943 83412.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் உரம் விற்பனை நிலையங்களில் கலப்பு உரம் ஆய்வு



பெரம்பலூர், அக்.22

பெரம்பலூர் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குநர் பாபுவின் அறிவுரையின்படி மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ராதாகிருஷ்ணன் ஆலோசனையின் படி, வேளாண்மை அலுவலர் கீர்த்தனா, வேப்பூர் வட்டாரம் புதுவேட்டகுடியில் உள்ள ஸ்ரீ பாலாஜி உரக்கடையில் உரம் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வகத்திற்கு அனுப்பிடும் பொருட்டு உர மாதிரிகள் எடுக்கப்பட்டது.மேலும் 8.84 மெட்ரிக் டன் கலப்புரத்திற்கு விற்பனைத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உரம் விற்பனை நிலையங்களிலும் வட்டார வேளாண்மை அலுவலர்கள் ஆய்வு செய்து உரம் மாதிரி எடுத்து உரம் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் ஆய்வு அறிக்கையின் படி உடனடியாக உரம் கட்டுப்பாட்டுச் சட்டம் 1985-ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண் உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து உரம் விற்பனையாளர்களும் ஓ படிவம் அனுமதி பெற்ற பிறகு அனைத்து உரம் விற்பனை செய்ய வேண்டும். பி ஓ எஸ் எந்திரத்தில் மூலம் அரசு மானியம் கொடுக்கும் உரங்களை கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு விற்பனை செய்ய வேண்டும். மானியம் இல்லாத உரங்களான கலப்பு உரம் விற்பனை செய்யும் போது கண்டிப்பாக விவசாயி களுக்கு பில் போட்டு தர வேண்டும். மற்றும் உரம் விற்பனை யாளர்கள் விவசாயிகளுக்கு உரத்தினை விற்பனை செய்யும் போது கட்டாயப்படுத்தி இணைபொருள்களை விற்பனை செய்யக்கூடாது, என்றும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW  isha  POWERGRID  BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வடகிழக்குப் பருவமழை காலத்தில் மழை வெள்ளத்தினால் பயிர் சாகுபடியில் ஏற்படும் மகசூல் இழப்பினைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்கள்

புதுக்கோட்டை, அக்.22

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, வடகிழக்கு பருவமழை காலத்தில் மழை வெள்ளத்தினால் பயிர் சாகுபடியில் ஏற்படும் மகசூல் இழப்பினைக் குறைப்பதற்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது, புதுக்கோட்டை நடப்பு சம்பா பருவத்தில் இதுநாள் வரை சுமார் 45,000 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ள நிலையில், மாவட்டம் முழுவதும் நெல் நடவு பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது.

தற்பொழுது சம்பா பருவ நெல் பயிர்கள் நடவு மற்றும் வளர்ச்சிப் பருவத்தில் உள்ளன. நெல் வயல்களில் நீண்ட நாட்களாக மழைநீர் தேங்கியிருக்கும் போது, போதிய காற்றோட்டம் இல்லாததாலும் மண்ணிலுள்ள ஊட்டச்சத்துகள் மழை நீருடன் கலந்து வெளியேறுவதால் போதிய ஊட்டச்சத்துகள் கிடைக்காததாலும் நெற்பயிர் இலைகள் வெளிரி மஞ்சள் நிறமாக மாறும், பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும்.

இத்தகைய சூழ்நிலையில் பின்வரும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வயலைச் சுற்றி நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்தி, வயலில் தேங்கியிருக்கும் அதிகப்படியான மழைநீரினை வடித்து, வேர்ப் பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்ய வேண்டும். மழை காலங்களிலும் வயல்களில் வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையிலும் உரம் இடுதல், பூச்சிக்கொல்லி தெளித்தல், களைக்கொல்லி இடுதல் போன்றவற்றைத் தவிர்த்திட வேண்டும். மழை வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நீர் வடிந்தவுடன், ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் ஆகியவற்றுடன் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு இரவு வைத்திருந்து 17 கிலோ பொட்டஷ் உரத்துடன் கலந்து இட வேண்டும்.

போதிய சூரிய வெளிச்சம் தென்பட்டவுடன், ஏக்கருக்கு 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ ஜிங்க் சல்பேட் உரத்தினை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் இலைவழி ஊட்டமாக தெளிக்க வேண்டும். தண்டு உருளும் பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தினை 10 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊர வைத்து, பின்னர் தெளிந்த கரைசலை வடித்தெடுத்து, இக் கரைசலுடன் 2 கிலோ யூரியா, 1 கிலோ பொட்டாஷ் உரத்தினை சேர்த்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுடன் ஆமணக்கு சாகுபடி

சேலம், அக்.22

**ஆமணக்கு மற்றும் நிலக்கடலை :** ஒவ்வொரு ஆறு வரிசை நிலக்கடலைக்கும் ஒரு வரிசை ஆமணக்கு (6:1 விகிதம்) பயிரிடலாம்.

**ஊடுபயிர்**

உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவை ஆமணக்கில் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த பயிரிடப்படும் ஊடுபயிர்களாகும். தோட்டக்கலைப் பயிர்களான வெள்ளரி, மிளகாய். மஞ்சள், வெங்காயம் மற்றும் கொத்தவரை ஆகியவை பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஊடுபயிராகப் பயிரிடப்படுகின்றன.

கொத்தமல்லி, உளுந்து மற்றும் நிலக்கடலை (1:2 விகிதத்தில்) ஆகியவற்றை ஆமணக்குடன் ஊடுபயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் பச்சை தத்துப்பூச்சி. வெள்ளை ஈ. காய்த் துளைப்பான் போன்ற பூச்சிகளின் தாக்கம் குறைகிறது. ஆமணக்கு தனிப் பயிராகச் சாகுபடி செய்வதை விட ஊடுபயிராகப் பயிரிடுவது அதிக இலாபம் தருகின்றது.

**ஆமணக்கு மற்றும் உளுந்து :** பருவமழை தாமதமாகும் காலங்களில் ஆமணக்குடன் உளுந்து ஊடுபயிராகப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆறு வரிசை உளுந்துடன் ஒரு வரிசை ஆமணக்கு என்ற விகிதத்தில் (6:1 விகிதம்) பயிரிடலாம்.

**ஆமணக்கு மற்றும் பச்சைப்பயறு :** மானாவாரிக்கு (1:2 விகிதம்) ஆமணக்கு ஒரு வரிசையும் பச்சைப்பயறு இரண்டு வரிசையும் பயிரிடலாம்.

**ஆமணக்கு மற்றும் வெங்காயம் :** வெங்காயம் மற்றும் ஆமணக்கு ஒரு சிறந்த ஊடுபயிராகும். வெங்காயம் குறுகிய காலப் பயிராகும். மேலும், இப்பயிருக்குப் பிற இடுப்பொருட்களின் தேவை குறைவாக உள்ளது. இறவையில் (1:2 விகிதம்) ஆமணக்கு ஒரு வரிசையும் வெங்காயம் இரண்டு வரிசையும் பயிரிடலாம்.

**ஆமணக்கு மற்றும் வெள்ளரி :** ஆமணக்கு மற்றும் வெள்ளரி சாகுபடி செய்வதன் மூலம் ஆமணக்கில் பூச்சித் தாக்குதலைக் குறைக்க முடியும். ஒரு வரிசை ஆமணக்குடன் இரண்டு வரிசை வெள்ளரி (1:2 விகிதம்) பயிரிடலாம்.

பயறு வகைப் பயிர்கள் அவற்றின் வேர் முடிச்சுகளின் மூலம் ஊட்டச்சத்துக்களை எடுத்து நிலைப்படுத்தி, ஆமணக்கிற்கு ஊட்டச்சத்துக்களை கிடைக்கச் செய்கின்றன. பயறு வகைப் பயிர்களின் வேர் முடிச்சுகள் மண்ணின் கட்டமைப்பை மேம் படுத்த உதவுகிறது. அறுவடைக்குப் பின் ஆமணக்கு மற்றும் பயறுவகைப் பயிர்களை வயலில் உரமாக்குவது மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரிக்க வழிவகுக்கும். களைகளின் தாக்கத்தைக் குறைக்கும்.

பயறு இரகங்களுடன் ஆமணக்கு ஊடுபயிராகப் பயிரிடு வதால் மண்ணின் ஈரப்பதம் மற்றும் நுண்ணுயிர்ப் பெருக்கம் அதிகரிக்கும்.




ஊடுபயிர்ச் சாகுபடியில் கருத்தில் கொள்ள வேண்டியவை ஊடுபயிர் மற்றும் கலப்புப் பயிர்களுக்கு. நடுத்தர வீரியமுள்ள கலப்பினங்களைத் தேர்வு செய்ய வேண்டும் (YRCH2, YRCH 3 மற்றும் DCH 519). ஊடுபயிரில் பயிர் எண்ணிக்கையைச் சூழ்நிலைக்கு ஏற்ப முறையாகப் பராமரித்தல் அவசியம்.


எனவே மேற்கண்டவாறு வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை ஆமணக்கில் ஊடுபயிராக பயிரிட்டு அதிக இலாபம் பெறலாம் என சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் கூறியுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கரூர் மாவட்டத்தில் விதை விற்பனை நிலையங்களில் சிறப்பு குழு ஆய்வு

கரூர், அக்.22

விவசாயிகளுக்கு தரமான விதைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை இயக்குநரின் ஆணையின்படி கரூர் மாவட்டத்தில் 13-10-25 அன்று விதை ஆய்வு துணை இயக்குநர் ஈரோடு, தலைமையில் விதை ஆய்வு துணை இயக்குநர், கரூர் மற்றும் விதை ஆய்வாளர்கள் கொண்ட சிறப்பு குழு கரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வின் போது விதை விற்பனை நிலையங்கள் அரசு உரிமம் பெற்றுள்ளனவா எனவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும் நெல், மக்காச்சோளம், கம்பு, உளுந்து மற்றும் காய்கறி விதைகளின் விதை பைகளில் உள்ள அட்டைகளில் பயிர் சாகுபடி செய்யப்படும் பருவம், இரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவைகளை சரியாக உள்ளதா எனவும் விற்பனை செய்யப்படும் இரகங்களுக்கான விதைகளுக்கு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையால் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழ் விதை குவியல்களுக்கான முளைப்புத்திறன் அறிக்கை உள்ளதா எனவும், விதை இருப்பு மற்றும் விலை விபரத்துடன் கூடிய விபரப்பலகை, விதை இருப்பு பதிவேடு, விதை கொள்முதல் விலைப்பட்டியல்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். விற்பனை பட்டியல்களில் இரகம், குவியல் எண், காலாவதி நாள் போன்ற விவரங்கள் உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்குறிப்பிட்ட ஆவணங்களை முறையாக பராமரிக்காத விதை விற்பனை நிலையங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூ.83,450/-மதிப்புள்ள நெல், மக்காச்சோளம் மற்றும் கம்பு விதைகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் விதை விற்பனை நிலையங்கள் அனைத்தும் விதைசட்டம், 1966 மற்றும் விதை கட்டுபாட்டு ஆணை, 1983 உள்ள விதிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டது.


கல்யாண்
ஜூவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மழைக்கால பயிர் பாரமரிப்பு மேலாண்மை



கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவ மழையாலும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் இடைவிடாத மழை தமிழகத்தின் கடற்கரையோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், தென்மாவட்ட பகுதிகளிலும் பெய்து வருகிறது. இந்த கால கட்டத்தில தான் தேங்கியுள்ள மழை நீரை வடிகால் வசதி மூலமாக வெளியேற்ற வேண்டும். மழை நீரில் பயிர்கள் மூழ்குவதால் ஏற்படும் சேதாரங்களை முக்கிய பயிர்கள் வாரியாக பார்ப்போம்.

**அ) நெல்**

பயிரின் நிலை – தற்போது நடவு மற்றும் நட்ட 25 தினங்களான பயிர்கள் மற்றும் அறுவடை நிலையில் தண்ணீரில் மூழ்கிய விளைந்த கதிர்கள்

**எடுக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்**

1) வயலில் தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விடவும்.

2) மண்ணில் அதிகமான ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் மண்ணின் இயல்பான வெப்ப தன்மை குறைந்து விடும். இதனால் மண்ணில் மணி, சாம்பல் சத்து, துத்தநாகம் போன்ற சத்துகளை பயிர்களை குறைந்த நிலையில் எடுத்துக் கொள்ளும். எனவே பயிரில் சத்துகளின் குறைபாடு தென்படும். எனவே இவற்றை சரி செய்ய நீரில் கரையக்கூடிய உரங்களான 19:19:19 ஒரு லிட்டருக்கு 5 கிராம் கலந்து இலைவழியாக தெளிக்க வேண்டும்.

3) தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில், பயிர்களின் சுவாசம் பாதிக்கப்படுவதுடன் நுண்ணுயிர்களின் செயல்பாடுகளும் குறைந்து விடும்.

4) மழைநீர் முழுமையாக வடிந்தவுடன் யூரியாவிற்கு பதிலாக அம்மோனியம் குளோரைடு/நைட்டிரேட் உரங்களை இடலாம்.

5) யூரியா இடுவதாக இருந்தால் 5:4:1 என்ற விகித்தில் யூரியாவுடன் ஜிப்சம் மற்றும் வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு நாள் இரவு வைத்திருந்து மறுநாள் இடவும்.

6) மழைக் காலங்களில் களைகளை கட்டுப்படுத்த களைக் கொல்லி/உரம் போடுதல்/பயிர் பாதுகாப்பு போன்ற செயல் பாடுகளை செய்யக் கூடாது. மழை நின்ற பின் தான் பிற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

7) நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையாக இருந்தால் சிங் சல்பேட் 1% கரைசல் தெளிக்க வேண்டும்.

8) உரிய நேரத்துல பயிர் காப்பீடு (இன்ஷூரன்ஸ்) செய்து விட வேண்டும்.

9) சாய்ந்த நெல் கதிர்களை தனியாக தனியாக அறுவடைசெய்ய வேண்டும்.

10) அறுவடை செய்த நெல்லை உடனடியாக நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனைசெய்திடல் வேண்டும்.

**ஆ) மக்காசோளம்**

பயிரின் நிலைமை. நடவு / நேரிடையாக விதைப்பு முதல் 25நாட்கள் வயதுடைய பயிர்பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக தென்மாவட்டங்களில் உள்ளது.

1) கூடுதலான மழை நீரை வடிகால் மூலமாக வடிக்க வேண்டும்.

2) பயிர்கள் மழையால் சாய்ந்து விடாமல் இருக்க மண் அணைத்து விடவும்.

3) இந்த மழையால் படைப்புழு வின் தாக்கம் குறைவு.

4) நீர்வடிந்த பின்பு 40 கிலோ யூரியா + 16 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவேண்டும்.

5) நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையாக போக்கிட நுண்ணூட்ட உரங்களை இடவேண்டும்.

**இ) பருத்தி**

நடவு / நேரிடை விதைப்பு முதல் 25நாட்கள் பயிரின் நிலைமை

1) கூடுதலான நீரை வடித்து விட வேண்டும்.

2) களைகள் கட்டுப்படுத்திட களை எடுக்க வேண்டும்.

3) மழையால் உரப்பற்றாக்குறை எற்படும் இதை தடுக்க 1% பொட்டாசியம் நைட்டிரேட் கரைசல்/ 20:20:20 கூட்டு உரங்களை இலை வழியாக தெளிக்கலாம்.

4) சாறு உறிஞ்சும் பூச்சிகள்/தண்டு கூண் வண்டு தாக்குதலை தடுக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**மொத்ததில் மற்ற பயிர்களுக்கான மழை மேலாண்மை தொழில்நுட்பங்கள்**

1) தண்ணீரை வடிக்க வேண்டும்.

2) மழையால் ஏற்பட்ட மண் இறுக்கத்தை கிளறி விடவேண்டும்.

3) மழையால் மண்ணிலிருந்து அரித்து செல்லப்பட்ட நுண்ணூட்ட சத்துகளை மழைக்கு பின் இடவோ, தெளிக்கவோ செய்ய வேண்டும்.

4) உரிய நேரத்தில் பயிர் காப்பீடு பயிர்களுக்கு செய்ய வேண்டும்.

5) பூச்சி/ நோய் தாக்குதலை பொருளாதார சேத நிலை (E.T.L) அறிந்து அதற்கேற்ப பயிர்பாதுகாப்பு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

6) வயதான நாற்றுகளை நடும் போது அடியுரமாக கூடுதலான உரமிடுதல்.

7) காய்கறி பயிர்களில் தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும்.

8) மழை நின்ற பின் இதர பின்செய் நேர்த்தி முறைகளை கையாள வேண்டும்.

9) மழைக்காலங்களில் பூச்சி மருந்து தெளிக்கக்கூடாது.

10) தினமும் வயலை சுற்றி பார்த்து அதிகப்படியான நீரை வெளியேற்ற வேண்டும். இவ்வாறாக செய்தால் தொடர் மழை பாதிப்பிலிருந்து பயிர்களை காப்பாற்றி கூடுதலான மகசூல் பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY
**பா.இளங்கோவன்**
M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# சம்பா சாகுபடி முன் பயிரில் குருத்து பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?

## வேளாண் உதவி இயக்குனர் மதுக்கூர் தகவல்

தஞ்சாவூர், அக்.22

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் நடைபாண்டில் சம்பா பருவத்தில் இதுவரை 1300 எக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு வளர்ச்சி பருவத்தில் உள்ளது. இந்த பருவத்தில் பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்ட உடனே கண்காணித்து உடனடியாக பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.



தற்போது மதுக்கூர் வட்டாரத்தில் சாவித்திரி மற்றும் ஏடீடி 51 சாகுபடி செய்துள்ள நெல் வயல்களில் தற்போது குருத்துப் பூச்சியின் தாக்குதல் வளர்ச்சி பருவத்தில் தென்படுகிறது. பாதிக்கப்பட்ட பயிர்களில் இலையின் நுனியில் பழுப்பு நிற முட்டை கூட்டம் காணப்படும் முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் வாயிலிருந்து வரும் இழைகள் மூலம் நேரடியாக குருத்துப் பகுதிக்குள் நுழைந்து தண்டில் வளரும் குருத்தை உட்கொள்வதால் குருத்து காய்ந்து விடும். எனவே, சரியான நேரத்தில் இதனை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக வெண் கதிர்களை உருவாக்கும் குருத்தை பிடித்து இழுக்கும்போது கையோடு வந்துவிடும். மஞ்சள் நிற அந்து பூச்சிகள் வயலில் காணப்படும். இலைகளின் நுனியை கிள்ளி விடுவதால் குருத்து பூச்சிகளின் முட்டை குவியல் அழிக்கப்படுகிறது.

வேப்பங்கொட்டை சாறு தெளிப்பதன் மூலம் குருத்துப் பூச்சியினை கட்டுப்படுத்தலாம். அசாடிராட்டின் 0.03% சத மருந்தினை இரண்டரை ஏக்கருக்கு ஒரு லிட்டர் வீதம் தெளித்து கட்டுப்படுத்தலாம். பூச்சியின் தாக்குதல் அதிகம் இருக்கும் பட்சத்தில் உடனடியாக குளோரோ டிரோனிலிபுருள்18.5எஸ்சி எக்டர்க்கு 50 மில்லி அல்லது ப்ளூ பெண்டமைடு 20% குருணை எக்டருக்கு 125 கிராம் ஆகிய ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்து குருத்து பூச்சியினை கட்டுப்படுத்தலாம்.

ஏக்கருக்கு தேவையான மருந்தினை 20 லிட்டர் நீரில் கலந்து கொண்டு ஒரு லிட்டர் மருந்து கரைசலை 9 லிட்டர் நீருடன் கலந்து மாவுக்கு ஏழு டேங்க் ஏக்கருக்கு 21 டேங்க் மிகாமல் தெளிக்க வேண்டும். தற்போது புதிய தலைமுறை பூச்சிக் கொல்லி மருந்துகள் நீண்ட கால கட்டுப்பாட்டுடன் பயிர் மேம்பாட்டு நன்மைகளுடன் கிடைக்கிறது. சயன்ட்ரோனி லிப்ரோல் 16.9% லுபெனுரான் 16.9 எஸ்சி பூச்சிக்கொல்லி மருந்து மினிக்டோ எக்ஸ்ட்ரா என்ற பெயரில் தற்போது பயன்பாட்டில் உள்ளது. இது நெற்பயிரை நீண்ட காலம் பாதுகாத்து சேதத்தை உடனடியாக நிறுத்துகிறது. குருத்துப் பூச்சியின் முட்டை முதல் அனைத்து வளர்ச்சி பருவத்தையும் வலுவாக கட்டுப்படுத்துகிறது. மழை பொழிந்தாலும் நீண்ட நாட்களுக்கு பயிரை பாதுகாக்க கூடிய தன்மை உடையது. இந்த மருந்தினை ஏக்கருக்கு 20 மில்லி 30 முதல் 45 நாள் வயதுடைய நெல்லின் வளர்ச்சி பருவத்தில் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து உடனடியாக கட்டுப்படுத்தலாம். இவ்வாறு மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் திலகவதி தெரிவித்துள்ளார்.

# அமரப்பூண்டி கிராமத்தில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நடத்திய வேளாண் மாணவிகள்

திண்டுக்கல், அக்.22

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண்மை மாணவிகள் ரா.துர்க்காதேவி, ஜானட், ஜெயசானியா, மீனா & பிரியதர்ஷினி ஆகியோர் தங்கள் RAWE- VSP திட்டத்தில், அமரப்பூண்டி கிராமத்தில் PRA (Participatory Rural Appraisal) பங்கேற்பு கிராமப் புற மதிப்பீட்டை நடத்தினர்.



இந்நிகழ்வில் கிராம மக்கள் நேரடியாக பங்கேற்று, தங்கள் கிராமத்தின் நிலை, வசதிகள், தேவைகள் மற்றும் பிரச்சனை களை வெளிப்படுத்தினர்.

மாணவர்களுடன் இணைந்து தரையில் வரைபடங்கள் மற்றும் குறியீடுகள் வரைந்து, கிராமத்தின் வளங்கள் மற்றும் சிக்கல்களை விளக்கினர்.

இவ்வாறு மாணவர்கள் மற்றும் மக்கள் இணைந்து செயல்பட்டதால், கிராமத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ளும் நல்ல வாய்ப்பு அமைந்தது.



# இறால் வளர்ப்பில் அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி

தூத்துக்குடி, அக்.22

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தருவைகுளம், கடற்சார் ஆராய்ச்சி பண்ணை வசதியில் 14 நாட்கள் கொண்ட திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் நடைபெற உள்ளது. இப்பயிற்சித் திட்டம் 'இறால் வளர்ப்புப் பண்ணைகளில் பணியாற்றும் இளநிலை உதவி யாளர்களுக்கான இறால் வளர்ப்பில் அடிப்படை தொழில் நுட்பங்கள்' எனும் தலைப்பில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் அக்டோபர் 28ம்தேதி தருவைகுளம், கடற்சார் ஆராய்ச்சி பண்ணை வசதியில் தொடங்க உள்ளது. இறால் பண்ணை அமைக்க நிலம் தேர்வு செய்தல், பண்ணை தயார் செய்தல், இறால் குஞ்சுகளை தேர்ந்தெடுத்து இருப்பு செய்தல், தீவன உணவு மேலாண்மை, இறால் நோய் தடுப்பு மேலாண்மை அறுவடை போன்ற தலைப்புகளில் அ;டிப்படை திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படும்.

**இப்பயிற்சியில் பங்கு பெற தகுதி**

- பன்னிரெண்டாம் ஆண்டு படிப்பு முடித்து இருக்க வேண்டும்.
- கல்லூரி படிப்பில் இடைநின்றவர்கள்.
- இறால் பண்ணை சார்ந்த பணிகளில் உள்ளவர்கள்.

பயிற்சி முடிந்த உடன் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி முடித்தவர்கள் இறால் வளர்ப்பு பண்ணைகளில் வேலை பெற வாய்ப்பு உள்ளது. மேலும் சொந்த தொழில் தொடங்கவும் முடியும். இப்பயிற்சியில் சேர கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர், கடற்சார் ஆராய்ச்சி பண்ணை வசதி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தருவைகுளம், தூத்துக்குடி – 628 105. தொலைபேசி : 0461 – 290 3324, அலைபேசி : + 91 94870 78758 (அலுவலக நேரம் மட்டும்). இதனை முதல்வர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி தெரிவித்துள்ளார்.

# "கிராமத்தில் கற்றோம்-நிலத்தில் நிறைவேற்றோம்"

செங்கல்பட்டு, அக்.22

வேளாண் கல்வியின் முக்கிய அங்கமாகிய RAWE — கிராம வேளாண் பணியாற்றும் அனுபவத் திட்டம், மாணவர்களுக்கு விவசாயத்தின் நடைமுறைகளை நேரடியாக அனுபவிக்கச் செய்கிறது.

நாங்கள் வேல்ஸ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கழகம் (VISTAS), பள்ளாவரம் — இல் நான்காம் ஆண்டு வேளாண்மை பட்டப்படிப்பு மாணவர்கள். இந்த ஆண்டின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக RAWE கிராம தங்கும் திட்டத்தில், நாங்கள் ஈசூர் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் தங்கி, அப்பகுதியின் வேளாண் நிலைமைகள் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கை முறைகளை நெருக்கமாக கற்றறிந்தோம்.

இந்த திட்டத்தின் போது நாங்கள் நியமிக்கப்பட்ட தொடர்பு விவசாயிகளுடன் பழகி, அவர்களின் நிலங்களில் மேற் கொள்ளப்படும் பாரம்பரிய மற்றும் நவீன வேளாண் முறைகள் குறித்து விரிவான தகவல்களைப் பெற்றோம்.

RAWE காலத்தில் நாங்கள் பல கள நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதில் சில முக்கியமானவை :

பஞ்சகவ்யம், மீன் அமிலம், ஜீவாமிர்தம், நீமாஸ்திரம் தயாரிப்பு, புழு உரம் தயாரிப்பு, கொய்யா மரத்தில் காற்றடுப்பு மற்றும் வளைத்தல் முறைகள், நெல் கொள்முதல் மையத்தின் முக்கியத்துவம், சேமிப்பு முறைகள் மற்றும் நெல் மதிப்பூட்டல், வேலூர் விவசாய அறிவியல் மையத்தில் காட்டுப்பன்றி தடுப்பு நுட்பங்கள், உயிரியல் விரட்டும் பொருட்கள் (பயோவிரெப் பலண்ட்), தென்னை மரத்தில் கவர்ச்சி வலை மூலம் களிற்றுப் பூச்சி கட்டுப்பாடு, ஓசோன் தின விழாவில் தாவர விநியோகம், வீட்டு மற்றும் மாடித்தோட்டப் பணி, வாழை மரத்தில் கிளை அகற்றுதல் மற்றும் உயிரியல் கட்டுப்பாடு, பிரிஞ்சல் பயிரில் பூச்சி மேலாண்மை, நெல் மதிப்பூட்டல் செயல் முறை, புழு உரம் தயாரிப்பு, சுரந்த நீர்ப்பாசன முறை, மண் மாதிரி சேகரிப்பு மற்றும் அதன் முக்கியத்துவம், இலை நிற அட்டவணை பயன்படுத்துதல் மற்றும் நெல் பயிரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை ஆகியவை அடங்கும்.

இந்த நடவடிக்கைகள் மூலம் நாங்கள் ஈசூர் கிராமத்தின் பயிர் முறை பற்றி அறிந்து, இயற்கை மற்றும் உயிரியல் வேளாண் முறைகளை ஊக்குவிக்கும் விதமாக விவசாயிகளை வழி நடத்தினோம். இதன் மூலம் பயிர் உற்பத்தி செலவை குறைத்து, வருமானத்தை அதிகரிக்கவும், நஞ்சில்லா உணவுப் பொருட்களை உருவாக்கவும் முடியும் என்பதை உணர்ந்தோம்.

மேலும், மதுராந்தகம் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட நெல் சேமிப்பு பிரச்சினை குறித்தும் ஆராய்ந்து, விவசாயிகளுடன் கலந்துரையாடி தீர்வுகளை பகிர்ந்து கொண்டோம். இதன் மூலம் நாங்கள் சிறந்த அக்ரி டாக்டராக வருவோம் என்று நம்புகிறோம் “நிலம் காக்கும் விவசாயம் தான் — உயிரை காக்கு உணவாகும்.”



இந்த RAWE திட்டத்தின் முழு காலமும் எங்கள் பேராசிரியர்கள் வழங்கிய வழிகாட்டுதலும், மூன்று ஆண்டுகளாகக் கற்ற வேளாண் அறிவும் எங்களுக்கு வலு சேர்த்தன. அவர்களின் ஊக்கமும் வழிகாட்டுதலும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் பிரதிபலித்தது. இதற்காக எங்கள் பேராசிரியர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி தெரிவிக்கிறோம்.

இந்நிகழ்ச்சி நடத்த உறுதுணையாக இருந்தவர் பாடத் தலைவர் மா.குமரேசன், உதவிப் பேராசிரியர் (தோட்டக்கலைத் துறை), மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் த.மீரா (தாவர நோயியல் துறை), VISTAS.

குழு மாணவர்களாகிய குமார்.J, தினேஷ்.R, மூலீஸ்வரன்.R, நீலகண்டன்.G, ஸ்ரீமன்.S, திருச்செல்வம்.N, தமிழரசன்.K, யோகேஸ்வரன்.K, அபிசேக்.K ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 8537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வாழைப்பழத்தில் சிகடோகா நோய் காரணங்கள், அறிகுறிகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக வளர்க்கப்படும் மிக முக்கியமான பழப் பயிர்களில் வாழைப் பழமும் ஒன்றாகும். 2021-ஆம் ஆண்டில் சுமார் 33 மில்லியன் மெட்ரிக் டன் வாழை உற்பத்தியுடன் இந்தியா உலகளவில் முதலிடத்தில் உள்ளது.

இந்தியாவில், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியவை வாழை சாகுபடியில் முக்கிய மாநிலங்களாகும். இருப்பினும், இந்தியாவில் வாழை விவசாயிகளுக்கு சிகடோகா இலைப்புள்ளி நோய் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சனையாகும். சிகடோகா இலைப்புள்ளி நோய் என்பது வாழை செடிகளைப் பாதிக்கும் ஒரு பூஞ்சை நோயாகும். மேலும் இது முறையாக நிர்வகிக்கப்படாவிட்டால் குறிப்பிடத்தக்க மகசூல் இழப்பை ஏற்படுத்தும். இந்த நோய் வாழைப்பழத்தின் விளைச்சலை 50% வரை குறைக்கலாம், இதன் விளைவாக விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க பொருளா தார இழப்பு ஏற்படும். இது பழத்தின் தரத்தையும் பாதிக்கும், இதனால் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்குப் பொருந் தாது. சாதகமான சூழ்நிலையில் இந்த நோய் மிக விரைவாகப் பரவுகிறது.

எனவே அதன் ஆரம்பகால கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் மேலாண்மை மகசூல் இழப்பைக் குறைப்பதற்கும் பழங்களின் தரத்தைப் பாதுகாப்பதற்கும் மிக முக்கியமானது.

**வாழையில் சிகடோகா இலைப்புள்ளி வகைகள்**

**வாழைத்தோட்டத்தில் பொதுவாகப் பாதிக்கும் சிகடோகா இலைப்புள்ளி வகைகள் பின்வருமாறு :**

- மஞ்சள் சிகடோகா இலைப்புள்ளி (மைக்கோஸ்பேரெல்லா மியூசிகோலா)
- கருப்பு சிகடோகா இலைப்புள்ளி (மைக்கோஸ்பேரெல்லா ஃபிஜியென்சிஸ்)

வாழையில் சிகடோகா இலைப்புள்ளியை ஏற்படுத்தும் இரண்டு வகையான பூஞ்சைகளில், மஞ்சள் சிகடோகா இலைப்புள்ளி வாழை உற்பத்திக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்து கிறது, அதே நேரத்தில் கருப்பு சிகடோகா இலைப்புள்ளி இந்தியாவில் அதிகம் காணப்படவில்லை.

**வாழையில் சிகடோகா இலைப்புள்ளி நோயை ஏற்படுத்தும் காரணிகள்**

● சுற்றுச்சூழல் நிலைமைகள் - அதிக ஈரப்பதம் மற்றும் 25 - 30°C வெப்பநிலை, மழைப்பொழிவு, மேற்பரப்பு ஈரப்பதம் நோய் விரைவாக பரவுவதற்கு உதவும் என்பதால் இலைகளில் நீடித்த ஈரப்பதம்.

● சிகடோகா இலைப்புள்ளி நோயால் எளிதில் பாதிக்கப் படக்கூடிய வாழை இரகங்களை பயிரிடுதல் — கேவென்டிஷ் மற்றும் ரோபஸ்டா.

● தாவர ஊட்டச்சத்து - பொட்டாசியம் போன்ற முக்கிய ஊட்டச்சத்துக்கள் இல்லாத தாவரங்கள் அதிக அளவில் பாதிக்கப்படக்கூடியவை.

● வயல் நிலைமைகள் - மோசமான வடிகால், பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தாவர குப்பைகள் இருப்பது.

**வாழைப்பழத்தில் சிகடோகா இலைப்புள்ளி நோயின் அறிகுறிகள்**

● ஆரம்பத்தில், இலைத் தாளின் நுனி அல்லது விளிம்புக்கு அருகிலும், இலைகளின் மைய நரம்புகளிலும் வெளிர் மஞ்சள் அல்லது பழுப்பு நிற பச்சை நிற கோடுகள் தோன்றும்.

● பின்னர், இந்தக் கோடுகள் பெரிதாகி, இலைகளில் சுழல் வடிவ புள்ளிகளாக மாறும், நரம்புகளுக்கு இணையாக மஞ்சள் நிற ஒளிவட்டத்தால் சூழப்பட்ட வெளிர் சாம்பல் நிற மையத்துடன் இருக்கும்.

● படிப்படியாக இலைகள் வறண்டு, பாதிக்கப்பட்ட இலைகள் உதிர்ந்து போகும்.

● சாதகமான சூழ்நிலையில், இந்த நோய் முழு இலை களுக்கும் பரவி, பழக் கொத்து தோன்றிய பிறகு கடுமையான தாக மாறும். பாதிக்கப்பட்ட தாவரங்களில் உள்ள பழங்கள் சிறியதாகத் தோன்றி, முன்கூட்டியே பழுக்கக்கூடும், இறுதியில் விளைச் சலைக் குறைக்கும்.

### தடுப்பு நடவடிக்கைகள்

● நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களை நடவு செய்ய வேண்டும்.

● நன்கு வடிகால் வசதியுள்ள மண்ணில் நடவு செய்ய வேண்டும் மற்றும் சரியான வடிகால் பராமரிக்க வேண்டும்.



● நீர் தேங்குவதைத் தவிர்க்கவும், ஏனெனில் இது வேர்கள் அழுகுவதற்கும், தாவரத்தை மேலும் பூஞ்சை தொற்றுக்கு வழிவகுக்கும் வகையில் பலவீனப்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

● நெருக்கமான இடைவெளியில் வாழைத்தண்டுகளை நடுவதைத் தவிர்க்கவும்.

● வயலில் அதிக கூட்டம் இருப்பதைத் தவிர்க்க அவ்வப்போது வாழைத்தண்டுகளை கத்தரிக்கவும், ஒன்று அல்லது இரண்டு ஆரோக்கியமான வாழைத்தண்டுகளை மட்டும் பராமரிக்கவும்.

● பூஞ்சை மேலும் பரவுவதைத் தவிர்க்க பாதிக்கப்பட்ட இலைகளை அவ்வப்போது அகற்றி அழிக்கவும்.

● தொற்று ஏற்பட்ட தாவரங்களில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட கத்தரித்தல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

● உரங்களை சீரான முறையில் பயன்படுத்துவதைப் பின்பற்ற வேண்டும்.

● இலைப் புள்ளிகள் தோன்றியதிலிருந்து நோய் தொடங்கும் என்பதால், 0.1% கார்பென்டாசிம் அல்லது 0.1% புரோபி கனோசோல் அல்லது 0.25% மேன்கோசெப் மற்றும் 0.25% டீபோல் (ஒட்டும் பொருள்) ஆகியவற்றை 10- 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்கவும்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

● வாழையில் சிகடோகா இலைப்புள்ளி நோயை திறம்பட நிர்வகிக்க விவசாயிகளுக்கு 0.1 சதவீதம் புரோபிகோனசோல் + 1 சதவீதம் பெட்ரோலியம் சார்ந்த கனிம எண்ணெய், அதைத் தொடர்ந்து கார்பென்டாசிம் 0.05 சதவீதம் + 1 சதவீதம் பெட்ரோலியம் சார்ந்த கனிம எண்ணெய் ஆகியவற்றை 20 நாள் இடைவெளியில் தெளிக்க பரிந்துரைக்கலாம்.

தகவல் : **ம.பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : banumalai1996 @gmail.com.**

